# செய்தி இல்லாத செய்தி

வாசிக்க: மத்தேயு 7:21-29

***"அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாக தேவ சந்நிதியில் பேசுகிறோம்" (2 கொரி 2:17)***

"அந்நாட்களில் ஆண்டவரின் வார்த்தை அபூர்வமாயிருந்தது" (1 சாமு 3:1). இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தில் மிக இருண்ட காலங்களில் இது ஒன்றாகும். இதே நிலை இன்று நமக்கும் ஏற்பட்டுவிட்டதோவெனக் கலங்குகிறேன். சபைச் சரித்திரத்தில் என்றுமில்லாத அளவு நமக்கு இன்று பிரசங்கிகளும் பிரசங்கங்களும் உண்டு. ஆனால் ஆண்டவருடைய "செய்தி" எங்கே?

ஆண்டவரது செய்தி நமது பிரசங்க பீடங்களில் அரிதாகி வருவதற்கு முதற் காரணம் செல்வம். பொதுவாக, செல்வம் நிறைந்த ஊழியரைவிட செல்வாக்கு குறைந்த பிரசங்கிமாரின் வாய்களிலிருந்தே ஆண்டவரின் செய்தி தெளிவாகவும், திட்டமாகவும் வருகிறது. பொன், பெண், புகழ் ஆகியவையே ஊழியர் பலர் தப்பிக்க முடியாதபடி சிக்கிக்கொண்ட மூன்று வலைகளாகும். இதில் முதலாவது வருவது பொருளாசையே. மக்களை வசப்படுத்தி அவர்களிடம் இருந்து பணம் கறப்பது இன்று வழக்கமாகிவிட்டது. சிறுவனொருவன் ஒரு நாணயத்தை விழுங்கிவிட்டான். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சிறுமி, "அவனை அந்தப் பிரசங்கியாரிடம் அனுப் புங்கள்; அவர் யாரிடமிருந்தும் பணத்தை எடுப்பதில் தேறினவர்" என்றாள்! "பணக்காரரைக் குறித்த பயம் பிரசங்கிமாருக்கு இருக்கவே இருக்கக்கூடாது" என்று வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி (1662-1714) எச்சரித்தார்.

ஆண்டவரின் செய்தி தடைபட அடுத்த காரணம் அற்புதங்கள் மீது அளவுகடந்த நாட்டம். பல நூற்றாண்டுகளாகப் பாரம்பரியக் கிறிஸ்தவ ஊழியமானது சுகமளிப்பு அற்புதங்களை உள்ளடக்காததால், குணமாக்கும் வரங்களின் மீது ஏற்பட்டுள்ள புதுப்பித்த ஆர்வமானது நம்மை அடுத்த ஓரத்திற்குத் தள்ளிவிட்டது. சுகமளிப்பு ஊழியத்தின்மீது ஏற்பட்டுள்ள அளவுக்கு மீறிய நாட்டமானது சுத்த சுவிசேஷத் தைக் களங்கமாக்கிவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ளது இரட்டை இழப்பு. இன்று அற்புதங்களும் (எதிர்பார்த்த அளவு) இல்லை, செய்தியும் இல்லை. தமது ஊழியத் தில் ஆண்டவராகிய இயேசு பிணியாளிகளைக் குணமாக்குவதை வலியுறுத்தினார். ஆனால் "முதலாவது" நற்செய்தியறிவிப்பு, அடுத்துதான் சுகமளிப்பு என்பதை நாம் கவனிப்பது முக்கியம். இரட்சிக்கப்பட்டு ஆனால் சுகம் பெறாத தொழு நோயாளி பரலோகம் போய்விடுவான்; ஆனால் சுகம் பெற்றும் இரட்சிக்கப்படாத பாவி அங்கு போகவே முடியாது!

தனது கூட்டங்களில் பண்டிதர் பில்லி கிரஹாம் (1918- ) பிணியாளிகளுக்காய் ஜெபிப்பதில்லை. ஆனால் அவரது கூட்டங்களிலேயே கூடுதல் நபர்கள் கிறிஸ்து வுக்காய்த் தீர்மானித்துள்ளனர்! இரகசியம்? அவரிடம் "செய்தி" உண்டு. மிகப் பெரிய தீர்க்கதரிசியைக் குறித்து, "யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை... அங்கு அநேகர் அவரிடம் விசுவாசமுள்ளவர்களானார்கள்" என்று எழுதப்பட் டுள்ளது (யோ 10:41,42). அவனிடம் ஒரு செய்தி இருந்தது! திருநெல்வேலியில் பணியாற்றிய தாமஸ் வாக்கர், டோனாவூரில் ஏமி கார்மைக்கேல், சிவகாசியில் தாமஸ் ராக்லாண்ட், கல்கத்தாவில் அன்னை தெரசா ஆகியோர் பிரதானமாக அற்புத ஊழியரல்ல. ஆனால் அவர்களது செய்தி தலைமுறை தலைமுறையாய்த் தொனித்துக்கொண்டிருக்கிறது!

PREACHING: NEXT ▶▶ MARCH 18